தமிழ்நாடு சட்டப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2041 – சித்திரை 16

2010 ஏப்ரல் 29, வியாழக்கிழமை

சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், புதிய சட்டப் பேரவை-தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"கற்றறிந்தார் கல்வி விளங்கும் கசடறச்
சொற்றெரிதல் வல்லார் அகத்து."

மாசற்ற சொற்களைத் தேர்ந்தெடுத்து உரை நிகழ்த்துவோரிடமே அவர் கற்றுத் தேர்ந்த கல்வியின் பெருமை விளங்கும்.

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

1. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். *(குறுக்கீடு)*

[2010 ஏப்ரல் 29

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நேற்றைக்கே ஒரு பிரச்சினையைக் கிளப்பினேன். இன்றைக்காவது அதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ளவையெல்லாம் என்னுடைய ஆய்விலே இருக்கின்றன. காலத்தின் அருமை கருதி, இன்றைக்கு எடுத்துக்கொள்ள முடியாத நிலைமை இருக்கிறது. (குறுக்கீடு) நாளைக்கு நீங்கள் சொன்னதையெல்லாம் எடுத்துக்கொள்ளலாம், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் சொல்வதையெல்லாம் நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம், உட்காருங்கள்.

2. அறிக்கைகள் அளித்தல்

பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. சிவராஜ், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

திரு. சு. சிவராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2009-2010 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 185-வது முதல் 191-வது வரையிலான ஏழு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

3. மானியக் கோரிக்கைகள், 2010-2011, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 4—ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2010-2011 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். 28-4-2010 அன்று முன்மொழியப்பெற்ற ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய மானியக் கோரிக்கை மற்றும் அதன்மீது முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின்மீதான விவாதத்திற்குப் பதிலுரை மற்றும் வாக்கெடுப்பு. மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.